சுருக்கம்

நீர்வள ஆதாரத் துறை–கடலூர் மாவட்டத்திலுள்ள வெள்ளாறு நதியின் போக்கு அவ்வப்பொழுது மாறுபடுதல்–விழுப்புரம்– மயிலாடுதுறை குறுகிய இரயில் பாதை பிரிவில் பரங்கிப்பேட்டை மற்றும் கிள்ளை இரயில் நிலையங்களுக்கு இடையிலுள்ள கி.மீ.240/350–450–அகல ரயில் பாதைக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது– தற்காலிகப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளுதல்– ரூ.92.00 இலட்சத்திற்கு– நிர்வாக ஒப்புதல் வழங்கி–ஆணை–வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி(ட்டி.1)துறை

அரசாணை (நிலை) எண்.260 நாள்.14.09.2010

ஆவணி 29 திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:–

1. முதன்மை தலைமைப் பொறியாளர், தென்னக இரயில்வே, சென்னை அவர்களின் நேர்முக கடித எண்.W.544/6/Vol.V, நாள். 30.7.2010
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம், அவர்களின் கடித எண்.T3/F.10592/2005, நாள்.10.8.2010

0/0/0

ஆணை

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தென்னக இரயில்வே, முதன்மைத் தலைமைப் பொறியாளர் அவர்கள் கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் அருகில் ஓடுகின்ற வெள்ளாறு நதியின் போக்கு அவ்வப்பொழுது மாறுபடுவதால், இரயில் சேவை மற்றும் பொதுமக்களுக்கு அபாயம் ஏற்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும், வெள்ளாறு அவ்வப்பொழுது தனது போக்கை மாற்றிக்கொள்வதால் அருகில் உள்ள பல கிராமங்கள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும், வெள்ளாறு தற்பொழுது விழுப்புரம், மயிலாடுதுறை குறுகிய இரயில் பாதை பிரிவில் பரங்கிப்பேட்டை மற்றும் கிள்ளை இரயில் நிலையங்களுக்கு இடையிலுள்ள கி.மீ.240/350–450–அகல ரயில் பாதைக்கு மிக அருகில் வந்துள்ளது என்றும் இவ்வாற்றின் போக்கு உடனடியாக தடுக்கப்படாவிட்டால் விழுப்புரம் மயிலாடுதுறை இரயில் பாதை பிரிவில் உள்ள முக்கிய இரயில்பாதைகள் வெள்ளத்தினால் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதென்றும், முக்கிய இரயில் பாதைகள் வெள்ளத்தினால் மூழ்காமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டது என்றும் இதற்காக ஒரு கூட்டம் நடத்துமாறு 29.7.2010 அன்று தலைமைச்செயலாளரைச் சந்தித்தபோது தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

2. தென்னக இரயில்வே முதன்மைத் தலைமைப் பொறியாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க 4.8.2010 அன்று மதியம் 1.00 மணி அளவில் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தின் முடிவில் தலைமைச் செயலாளர் அவர்கள் வெள்ளாற்றினால் ஏற்பட்டுள்ள ஆபத்தை உடனடியாக தடுக்க தற்காலிக வெள்ளத் தடுப்பு பணிகளை மேற்கொள்ளத் தேவையான கருத்துருக்களை அரசுக்கு அனுப்புமாறு தெரிவித்தார்.

3. தலைமைச் செயலாளர் அவர்களின் ஆணைக்கிணங்க பார்வை இரண்டில் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம், தலைமைப் பொறியாளர், அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரம் கொள்ளிடம் வடிநில உபகோட்டம் கிதம்பரத்தைச் சார்ந்த நகர பிரிவு–II சிதம்பரம் பராமரிப்பில் கிள்ளை அருகே வெள்ளாறு உள்ளது என்றும், இது கடந்த 2005ம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட கன மழையின் காரணமாக, வெள்ள நீர் அதிக அளவில் பெருக்கெடுத்து வெள்ளாற்றில் ஓடியதால் கிள்ளை கிராமம் அருகே மடுவங்கரை கிராமத்தில் வெள்ளாற்றின் வலது கரையில் மண் அரிப்பு ஏற்பட்டு இருப்புப் பாதை போக்குவரத்து தடைபட்டது என்றும், மேலும் தற்பொழுது கரையில் மண் அரிப்பு ஏற்படாமல் இருக்கவும், வலது கரையைப் பலப்படுத்தி மேம்பாடு செய்யவும், இருப்புப்பாதை போக்குவரத்தினை காப்பாற்றும் பொருட்டும், அங்கு தற்காலிக தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், மேலும் மண் அரிப்பு ஏற்பட்ட இடத்தில் இருந்து சுமார் 360 மீட்டர் நீளத்திற்கு, 12 மீட்டர் உயரத்தில் பனை மரங்களை தரையினுள் இறக்கி சுவர் போன்று இரு வரிசையாக அமைத்து, அதன் இடையில் காலி சிமெண்ட சாக்கு பைகளில் செஞ்சரளையினை நிரப்பி, ஆற்றின் அதிக பட்ச தண்ணீர் மட்டம் வரை அடுக்கவும், மேலும் மண்அரிப்பு ஏற்பட்ட இடத்தில் சுமார் 9 மீட்டர் அகலத்திற்கு 360 மீட்டர் நீளத்திற்கு கடின வகை மண் கொண்டு நிரப்பவும் இம்மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு செய்யும் பட்சத்தில், ஆற்றின் திசையில் மாற்றம் ஏற்பட்டு கரையில் மண் அரிப்பு ஏற்படாமல், இருப்பு பாதை போக்குவரத்து வசதி பாதுகாக்கப்படும் என்றும் வெள்ள நீர் அதிகமாக வெள்ளாற்றில் வரும்பொழுது தண்ணீர் அழுத்தத்தினை சுவர் போல் இருந்து தாங்கி பாதுகாக்கவும் இது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றும் தெரிவித்து விழுப்புரம், மயிலாடுதுறை குறுகிய இரயில் பாதை பிரிவில் பரங்கிப்பேட்டை மற்றும் கிள்ளை இரயில் நிலையங்களுக்கு இடையிலுள்ள கி.மீ.240/350–450–அகல ரயில் பாதைக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் அங்கு தற்காலிகப் பாதுகாப்பு பணிகளைமேற்கொள்ள 2010–2011ம் ஆண்டின் விலை விகிதப்படி ரூ.92.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்க அரசை கோரினார்.

4. நீர்வள ஆதாரத்துறை, சென்னை மண்டல, தலைமைப் பொறியாளர், அனுப்பியுள்ள கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து விழுப்புரம், மயிலாடுதுறை குறுகிய இரயில் பாதை பிரிவில் உள்ள பரங்கிப்பேட்டை மற்றும் கிள்ளை இரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள கி.மீ.240/350–450–அகல ரயில் பாதைக்கு வெள்ளாறு நதியின் போக்கு அவ்வப்போது மாறுபடுவதால் ஏற்படும் பாதுகாப்பற்ற சூழ்நிலையை கருத்தில் கொண்டு தற்காலிக பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள 2010–2011 ஆண்டின் விலைவிகிதப்படி ரூ.92.00 இலட்சத்திற்கு (ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடுகிறது. மேலும் மேற்கண்ட பணியினை அனுமதிக்கப்பட்ட தொகைக்குள், குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும், திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை அரசுக்கு ஒவ்வொரு மாதமும் அனுப்பி வைக்குமாறும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித்துறை, கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 4ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் கோரிக்கை எண்.40–01ன் கீழ் துவக்கப்பட்ட பின்வரும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

> “4711–வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டம் குறித்த மூலதனச் செலவு–01–வெள்ளக் கட்டுப்பாடு–103 சிவில் பணிகள்–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–KU-கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கிள்ளை இரயில்வே பாதைக்கு அருகில் வெள்ளாற்றின் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புப் பணிகள்–16.பெரும் பணிகள்.” (த.தொ.கு: 4711–01–103– KU-1600)

6. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித்துறை அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

7. சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல கணக்கு அலுவலர், மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும் (New Service). இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர் நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன் பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதித்(வ.செ.பொது.I ) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். மேலும் தற்பொழுது தேவையான தொகைக்கு முன்பணம் ஒப்பளிப்பு செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையுடன் நிதித்(வ.செ.பொ.I) துறைக்கு விண்ணப்பிக்க முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை (மற்றும்) தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5 கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச்செலவினத்தை 2010–2011ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimates) சேர்ப்பதற்காக உரிய செயற்குறிப்புகளை அரசின் நிதித்(வ.சொ.பொது.I)/பொ.ப.II) துறைக்கு தகுந்த நேரத்தில் தவறாமல் அனுப்புமாறு மேற்கண்ட துறை அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

9. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.குறிப்பு எண். 78/US(NK)/PW-II/2010, நாள்.14.9.2010 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.905(தொள்ளாயிரத்து ஐந்து)ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர் நீர்வள ஆதாரத் துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை (திட்ட உருவாக்கம்), சென்னை–5
மாநில கணக்காயர், சென்னை.18/35
மாவட்ட கருவூல அலுவலர், கடலூர்.
நகல்
நிதி (பொ.ப.II/வ.செ.பொ.I/II)துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி)அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
இ.கோ /உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.